1982 மார்ச் 18]

தஞ்சை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போ.

*வினா எண். 546—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக டெப்போவில் ஓட்டுநர்கள் இல்லாமல் சில விரைவுப் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆமெனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ): திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் தஞ்சாவூர் பணிமனையிலிருந்து தினசரி செல்ல வேண்டிய அனைத்துப் பேருந்துகளும் தவறாமல் இயக்கப்படுகின்றன. எந்தப் பேருந்தும் நிறுத்தப்படவில்லை.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் ஓட்டுநர்கள் கூடுதல் பணி செய்வதால் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் ஓட்டுநர்கள் கூடுதல் பணி செய்வதால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. இந்தக் குறையைப் போக்க, நிவர்த்தி செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, ஓட்டுநர்கள் அங்கே கூடுதல் பணி செய்வதாக தகவல் இல்லை. காரணம் ஒரு பேருந்துக்கு 2.5 ஓட்டுநர்கள் அதாவது 5 ஓட்டுநர்கள் இரண்டு பேருந்துகளுக்கு என்ற வகையிலே கணக்கிட்டு நியமித்திருக்கிறோம். எனவே கூடுதல் பணி செய்வதற்கான அவசியம் இல்லை.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியுடன், வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, விரைவுப் பேருந்து ஓட்டுநர்களுக்கு மாதத்திற்கு எவ்வளவு நாள் பணி என்று வரையறுக்கப்பட்டுள்ளது? கூடுதலாகப் பணி செய்கின்றவர்களுக்கு எந்த அளவிற்குச் சம்பளம் அதிகம் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கூடுதல் பணி என்ற பேச்சுக்கு இடமே இல்லை. காரணம் தேவையான அளவிற்கு, சட்டப்படி எவ்வளவு ஓட்டுநர்கள் வைக் வேண்டுமோ, அவ்வளவு ஓட்டுநர்கள் நாம் வைத்து இருக்கிறோம். ஆகவே, கூடுதல் பணி செய்ய வேண்டிய சூழ்நிலை இல்லை. ஒருவர் டியுடி முடித்து விட்டுப் போனால், அடுத்த நாள் பணிக்கு வேறு ஒரு ஓட்டுநர் வருவார்.

ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக அளிக்கப்பெற்ற பாடப் புத்தகங்கள்

*வினா எண். 547—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை நகரில் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில் அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு?

(ஆ) அதனால் பயன் அடைந்த குழந்தைகள் எத்தனை பேர்?

(இ) இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களில் செயல் படுத்தத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) சென்னை நகரில் ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்கிய வகையில் 1980-81-ம் ஆண்டில் அரசுக்கு ஏற்பட்ட செலவு ரூ. 13,695.15 ஆகும்.

(ஆ) அதனால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 533 ஆகும்.

(இ) இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பள்ளிப் பாடப்புத்தகங்கள் வழங்குவது போல், உடல் ஊனமுற்ற பள்ளிக் குழந்தைகளுக்கும் வழங்குவதற்கு இத்திட்டத்தை விரிவு படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, விதவைகளின் குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதுபோல், உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் உதவித் தொகை அளிக்கப் படுகிறது. 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும்